செ.வெ.எண்:30 நாள்:13.09.2021

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாராந்திர குறைதீர்க்கும் நாள் கூட்டம் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாராந்திர காணொளி மற்றும் நேரடி குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வாராந்திர காணொளி மற்றும் நேரடி குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வங்கிக் கடன் மற்றும் உதவித்தொகை உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து காணொளி காட்சி மூலம் மனுக்களும், மனு பெட்டி மூலமாக குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு, கல்வி உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து மொத்தம் 147 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் டாக்டர். அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பில் ஒரு பெட்ரோல் ஸ்கூட்டர் ரூ.76,500 மதிப்பில் 5 மாற்றுத்திறனாளிக்கு ரூ.3,82,500 மதிப்பீட்டில் இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், ஒரு நபருக்கு ரூ.45,000 மதிப்புள்ள, நவீன செயற்கை கால் உதவி உபகரணம் ஒரு நபருக்கும், வருவாய்த்துறை சார்பில் ரூ.4,40,000 மதிப்பீட்டில் 11 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப்பட்டாவையும், மாவட்ட தொழில் மையம் சார்பில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் ரூ.2,93,400 மதிப்பீட்டில் 2 நபர்களுக்கு அரசு வழங்கும் மானியம் ஒப்பளிப்பு ஆணை போன்ற நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.வி.ஷகிலா, சமூக பாதுகாப்பு துணை ஆட்சியர் திரு.கு.ராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.குணசேகரன், மாவட்ட துணை ஆட்சியர் (பயிற்சி) எம்.சௌமியா, மாற்றுத்திறனாளி நலத்துறை அலுவலர் திரு.வ.சீனிவாசன், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு.பூ.கமலகண்ணன், வட்டாச்சியர் திரு.ஜெயபாலன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**